திருவள்ளூர் மாவட்டம் வேளாண் விற்பனை வாரியத்தால் சோழவரம் வட்டாரம் ஆரணி மற்றும் திருவள்ளூர் வட்டாரம் கிளாம்பாக்கம் பகுதியில் தலா ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய துணை வேளாண் விரிவாக்க மைய கட்டடத்தினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து 19 விவசாயிகளுக்கு ரூ. 7,33,238 மதிப்பீட்டில் வேளாண் உபகரணங்களை வழங்கினார் உடன் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, டி. ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகரன், மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர், வேளாண்மை இணை இயக்குனர் கலாதேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை மோகன், வேளாண் உதவி இயக்குநர்கள் ரமேஷ் , ஸ்ரீ சங்கரி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பி.ஜெ.மூர்த்தி, மாநில மாணவர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், ஒன்றிய செயலாளர் செல்வசேகரன், ஆரணி நகர செயலாளர் முத்து, திருவள்ளூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், மற்றும் த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், பேரூராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.கே.சொக்கலிங்கம், மற்றும் விவசாய பெருமக்கள் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பங்கேற்கும் வீர வணக்கநாள் பொதுக்கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடுகள் செய்வது குறித்து ஆலோசிக்க நேற்று நடைபெற்ற செங்கல்பட்டு நகர கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். அருகில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகரச் செயலாளர் எஸ். நரேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், ஊராட்சி மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மாவட்ட அமைப்பாளர் கே. சுரேஷ் குமார் ஏற்பாட்டில்

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் அறிமுக கூட்டம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை ஆற்றினார்!

திருவள்ளூர் ஜன 25;

கழகத் தலைவர் தமிழ் நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க திருவள்ளூர் மத்திய மாவட்டம் திமுக இளைஞரணி சார்பில் ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் பட்டாபிராம் தண்டரை பகுதியில் உள்ள ஜெய கிரிஸ் திருமண மண்டபத்தில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி மா.செ. ராஜேஷ், தெ.பிரியாகுமார், ஆவடி மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இள.ஸ்ரீதர், எஸ்.எஸ். முஸ்தபா அஃப்ரிடி, ஜி.சதீஷ் குமார், மகா.புவனேஷ், ரங்கநாதன் மகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இதில் சிறுபான்மையினர் நலன் (ம) வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி புதியதாக பொறுப்பேற்றுள்ள அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு கைகடிகாரம் வழங்கினார்.

இதனை தொடர்ந்து நிகழ்ச்சி பேசுகையில் , இந்தியாவிலே கட்சியினை கட்டுக்கோப்பாக நடத்தும் ஒரே கட்சி திமுக தான். இளைஞர்களின் பங்கு முக்கியமானது. நமது முதலமைச்சர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணியில் இருக்கும் பொழுது தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து கட்சிக்காக உழைத்தார். நான் இளைஞர் அணியில் இருக்கும் பொழுது என் குடும்பத்துடன் இருப்பதை விட அதிக நேரம் கட்சி பணியிலும் தளபதியுடனும் தான் இருப்பேன். கட்சியினை மேம்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என கூறினார்.

மாநில ஆதிதிராவிட நலக் குழு செயலாளரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், ப. அப்துல் மாலிக், மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, கோவில் லெனின், இளமாறன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், பேபி சேகர் , ஜி.நாராயண பிரசாந்த், பொன் விஜயன், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், செ.பிரேம் ஆனந்த், என்.இ.கே.மூர்த்தி, ஜி.ஆர்.திருமலை, தி.வை.இரவி, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை,ஜன.25-

பகுதிச் செயலாளர் - 12 வது மண்டல குழு தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான அண்ணன் மாண்புமிகு தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (25.01.2025 சனிக் கிழமை) வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்திற்கு பல்லாவரம் வருகை தர இருப்பதால், ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட, பொதுக் குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

12வது மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என். சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இரா.லட்சுமணன் தலைமை! ஜே.ஜே.எபினேசர், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

ஆர்.கே.நகர் கிழக்கு - மேற்கு பகுதி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

வாகை சந்திரசேகர் சிறப்புரை! ஆர்.டி.சேகர், புலவர் சாமி நாகப்பன், கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் மூர்த்தி பங்கேற்பு!

சென்னை ஜன.25-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு மேற்கு பகுதி சார்பில் மொழிப்போரில் இன்னுயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.1.2025 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் ஏ.இ. கோயில் தெரு புதுவண்ணை செ-81ல் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லடசுமணன் தலைமை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,பகுதி செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன்,க.ஜெயராமன், வ.பெ.சுரேஷ்,அ.முருகன்,இரா. செந்தில்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

என்.அனிபா, ஆர்.டி. ராஜா,கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், மாஸ் டி.வெங்கடேசன், எம். கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன், மா.நாகராஜ்,ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, ஜெ. பிரேம்ஆனந்த், நேதாஜி யு. கணேசன் எம்.சி, எஸ்.எல்.சுந்தர், கே.தேவன், ஆர்.ஏ. எம். சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர். ராஜன், வெ.சு.சத்தியநாராயணன், மோ.ரவிக்குமார், பிரசிடென்சி சி.சதிஷ், ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன், எஸ்.சத்தீஸ்வரி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் இயல் இசை நாடாக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ,.தலைமை கழக பேச்சாளர் புலவர் சாமிநாகப்பன்,டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

தா.இளையஅருணா, ந.மனோகரன், இரா.கருணாநிதி, இரா.மதிவாணன், பி.டி. பாண்டிசெல்வம், என்.மருது கணேஷ், இரா.நரேந்திரன், ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர். கமலகண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி.தயாளன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, வே. சிவக்குமார், கி.ராஜேந்திரன், டி.கமலக்கண்ணன், ஏ.தமிழ்செல்வன், பா.மதிவாணன், க.அமலு,நா.சண்முகம், டி.வி.முத்துகிருஷ்ணன், த.தமிழ்கொடி, கு.நற்குணம், வண்ணைமோகன், ஏ.டி. மணி, சி.மணிகண்டன், எஸ். எம்.பரசுராமன், வி.வி. ரமேஷ், ஆ.ரமேஷ்பாபு, வை.கலைவாணன், எம். விமலா,ஆ.மோகன், லயன் எம்.தீனதயாளன், லியோ.டி. சுரேஷ், கார்த்திக்செங்குட்டுவன், லட்சுமிவேலு, பி.செந்தில்குமார், த.சிவராமன், கே.கலையரசன், எம்.பி.டி. அப்துல்ரஹ்மான், வெ.இன்பரசன், கோ.சதீஷ், பி.பிரகாஷ், இர.பொன்இளவரசன், லயோலா கே.மதன், வை. கௌதமன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, இ.ரவிகுமார், எம்.எம்.சாமி, பி.கே.மூர்த்தி, ஜெ.சுரேஷ்பாபு, ஆர். ரமேஷ், கே.மோகன், சா.திருப்பதிசாமி, டி.ஆர். தணிகாசலம், வி.முத்து, பி.அன்பழகன், எம். ரூபசங்கர், எஸ்.சொக்கலிங்கம், ஜி.ராஜா, டி.சங்கர், மீஞ்சூர் முகுந்தன், கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, தேவிகதிரேசன் எம்.சி, குமாரிநாகராஜன் எம்.சி, பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, மணிமேகலை எம்.சி,மற்றும் சார்பு மன்ற நிர்வாகிகள் பாக முகவர்கள்,பாக பணியாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள்.

மொழிப்போர்த் தியாகி அரங்கநாதன் நினைவிடத்தில் அஞ்சலி!

கலைஞர் நகர் வடக்கு - தெற்கு பகுதிக் கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்பீர்!

பகுதிச் செயலாளர்கள் மு.ராசா – கே.கண்ணன் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 25

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்கு மற்றும் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.ராசா, கே.கண்ணன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, தாய் தமிழை காக்க, தன் தேக்குமர தேகத்தை தீயிக்கு ஈந்த தியாக தீபமான மொழிப்போர் தியாகி அரங்கநாதன் அவர்களுக்கு இன்று (25.1.2025 சனிக்கிழமை) காலை 8 மணியளவில், சென்னை, விருகம்பாக்கத்தில் உள்ள நினைவிடத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் கழக முன்னணியினர் மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமைக் கழக, மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து நிலை செயல் வீரர்கள், பகுதி வட்ட நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் இளைஞர் அணி மகளிர் அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து மொழிப்போர் தியாகிக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கலைஞர் நகர் வடக்கு மற்றும் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.ராசா, கே.கண்ணன் ஆகியோர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.